# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

# பதவி வெற்றிடங்கள்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

**01. பதவிப் பெயர் :- பணிப்பாளர் (நிருவாகம்)**
**சேவை வகுதி :- "சிரேஷ்ட முகாமையாளர்"**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை :- 01**

**01.1. தகைமைகள்**

**01.1.1. வெளிவாரி விண்ணப்பகாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம்/ வர்த்தகம்/ மனித வள முகாமைத்துவம்/ பொது நிருவாகம் ஆகிய பாடங்களில் ஏதேனுமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

***அதனோடு சேர்த்து***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, பதவிக்கு ஏற்புடைய பாடத்துறையில் பட்டப் பின்படிப்பொன்றை மேற்கொண்டிருத்தல்.

***அத்துடன்***

அரசாங்க, அரச கூட்டுத்தாபன/ நியதிச்சட்ட சபையொன்றில்/ சபையொன்றில் அல்லது அங்கீகாரம்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்ட பதவியொன்றில் குறைந்தபட்சம் சம்பந்தப்பட்ட துறையில் 15 ஆண்டு கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**02. பதவிப் பெயர் :- பணிப்பாளர் (நிதி)**
**சேவை வகுதி :- "சிரேஷ்ட முகாமையாளர்"**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை :- 01**

**02.1. தகைமைகள்**

**02.1.1.வெளிவாரி விண்ணப்பகாரர்கள் (கீழ்க்காணும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி/ கணக்கீடு/ வர்த்தகம் ஆகிய பாடங்களில் ஏதேனுமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

***அல்லது***

இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக இருத்தல் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டயம்பெற்ற முகாமைத்துவ நிறுவகத்தின் (CIMA)

உறுப்பினராக இருத்தல் அல்லது பட்டயம்பெற்ற சான்றிதழ் கணக்காளர் நிறுவகத்தின் (ACCA) உறுப்பினராக இருத்தல்.

***அதனோடு சேர்த்து***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, பதவிக்கு ஏற்புடைய பாடத்துறையில் பட்டப் பின்படிப்பொன்றை மேற்கொண்டிருத்தல்.

***அத்துடன்***

மேலே குறிப்பிட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரசாங்க, அரச கூட்டுத்தாபன/ நியதிச்சட்ட சபையொன்றில்/ சபையொன்றில்/ திணைக்களமொன்றில் அல்லது அங்கீகாரம்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்ட பதவியொன்றில் குறைந்தபட்சம் சம்பந்தப்பட்ட துறையில் 15 ஆண்டு கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

2. இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் பூரண உறுப்புரிமை

***அத்துடன்***

அரசாங்க, அரச கூட்டுத்தாபன/ நியதிச்சட்ட சபையொன்றில்/ சபையொன்றில் அல்லது அங்கீகாரம்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்ட பதவியொன்றில் குறைந்தபட்சம் சம்பந்தப்பட்ட துறையில் 15 ஆண்டு கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**03. பதவிப் பெயர் :- பணிப்பாளர் - போதையூட்டும் ஔடத தடுப்பு, கல்வி மற்றும் பயிற்சி)**
**சேவை வகுதி :- "சிரேஷ்ட முகாமையாளர்"**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை :- 01**

**03.1. தகைமைகள்**

**03.1.1.வெளிவாரி விண்ணப்பகாரர்கள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, சமூக விஞ்ஞானங்கள் என்ற பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

***அதனோடு சேர்த்து***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, பதவிக்கு ஏற்புடைய பாடத்துறையில் பட்டப் பின்படிப்பொன்றை மேற்கொண்டிருத்தல்.

***அத்துடன்***

மேலே குறிப்பிட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரசாங்க, அரச கூட்டுத்தாபன/ நியதிச்சட்ட சபையொன்றில்/ சபையொன்றில்/ திணைக்களமொன்றில் அல்லது அங்கீகாரம்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்ட பதவியொன்றில் குறைந்தபட்சம் சம்பந்தப்பட்ட துறையில் 15 ஆண்டு கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பகாரர்கள் (மேற்போந்த 1, 2, 3 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக)**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பகாரர்களுக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

2. தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் நடுத்தர முகாமைத்துவ (MM) சேவை வகுதியில் தரம் I இல் குறைந்தபட்சம் 05 ஆண்டுகள் சம்பந்தப்பட்ட துறையில் திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள வகுதி** – **HM 1-1**

**சம்பள அளவுத்திட்டம்** – (ரூ. 80,295 – 15 x 2,270 – ரூ. 114,345/-)

(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.)

**வயதெல்லை** – 35 வயதுக்குக் குறையாதவராகவும், 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பகாரர்களுக்கு இந்த ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

**04. பதவிப் பெயர் :- உதவி பணிப்பாளர் (ஆராய்ச்சி)**
**சேவை வகுதி :- "முகாமையாளர்"**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை :- 01**

**04.1. தகைமைகள்**

**04.1.1. வெளிவாரி விண்ணப்பகாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூகவியல்/ குற்றவியல்/ சமூகவேலை/ புள்ளிவிவரவியல்/ தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடத்துறைகளில் ஏதேனுமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

***அத்துடன்***

மேலே குறிப்பிடப்பட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பதவிக்குரிய துறையில் குறைந்தபட்சம் 03 ஆண்டு கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**05. பதவிப் பெயர் :- உதவி பணிப்பாளர் (சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு)**
**சேவை வகுதி :- "முகாமையாளர்"**
**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை :- 01**

**05.1. தகைமைகள்**

**05.1.1. வெளிவாரி விண்ணப்பகாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, சமூகவியல்/ உளவியல்/ குற்றவியல்/ சமூக வேலை ஆகிய பாடத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

*அத்துடன்*

மேலே குறிப்பிடப்பட்ட இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், பதவிக்குரிய துறையில் குறைந்தபட்சம் 03 ஆண்டு கால அனுபவமொன்றைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பகாரர்கள் (மேற்போந்த 4, 5 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக.)**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பகாரர்களுக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

*அல்லது*

2. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் குறித்த துறைக்குரிய பதவியொன்றில் தரம் II இல் குறைந்தபட்சம் 05 ஆண்டு திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள வகுதி** – **MM 1-1**

**சம்பள அளவுத்திட்டம்** – (ரூ. 53,175 – 10 x 1,375 – 15 x 1,910 – ரூ. 95,575/-)

(சம்பளம் தவிர, அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.)

**வயதெல்லை** – 22 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பகாரர்களுக்கு இந்த ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

**வேறு:**

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு ஏற்ற உடல், உள தகுதிகளைப் பெற்றவராகவும், நிறந்த நன்னடத்தையுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியன்று தேவைப்படுத்தப்படும் தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்திசெய்தவராக இருத்தல் வேண்டும்.**

**விண்ணபபங்களைச் சமர்ப்பிப்பதற்கான மொழிமூலம்:**

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் ஆங்கிலமொழியில் மாத்திரம் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை:**

ஆட்சேர்ப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு எழுத்துமூலப் பரீட்சையொன்றின் அத்துடன்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**நியமனத்தின் தன்மை:**

நிரந்தரமானது; ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கும் உரித்துடையது.

**<u>விண்ணப்பக் கட்டணம்</u>**

வெளிவாரி விண்ணப்பகாரர்கள் மாத்திரம் விண்ணப்பக் கட்டணமாக ரூ.500.00 தொகையை நாட்டின் எந்தவோர் அஞ்சல் அலுவலகத்திலும் செலுத்தி 'தவிசாளர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை'' என்ற பெயருக்கு வரையப்பட்ட **<u>சாதாரண காசுக் கட்டளையொன்றை</u>** விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும். அதில் கொடுப்பனவு அலுவலகமாக **"இராஜகிரிய அஞ்சல் அலுவலகம்"** என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம், மீளளிக்கப்பட மாட்டாது.

உங்கள் விபரங்களை "A4" அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி சபையின் இணையத்தளத்திலுள்ள (www.nddcb.gov.lk) மாதிரிப் படிவத்தைப் பூரணப்படுத்தி (கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட்டு) சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2020.11.13.** ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் **தவிசாளர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, இல.383, கோட்டே வீதி, இராஜகிரிய** என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு **பதிவு அஞ்சலில்** அனுப்பிவைக்கவும். அரச கூட்டுத்தாபனங்களில் அல்லது நியதிச்சட்ட சபைகளில் பணிபுரியும் ஊழியர்கள், தாபன/ திணைக்களத் தலைவர் ஊடாக தமது விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

**ஒழுங்காகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும், காசுக் கட்டளை இணைக்கப்படாத விண்ணப்பங்களும், மாதிரி விண்ணப்பப் படிவத்தில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.**

**ஆட்சேர்ப்பு சம்பந்தமாக சபையினால் எடுக்கப்படும் முடிபு, இறுதியானதாகும்.**

**தவிசாளர்,**
**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை,**
**இல.383, கோட்டே வீதி,**
**இராஜகிரிய.**

பதிப்பிக்கும் திகதி: 2020.10.23